GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023
LIBRARY

TA3A

Register No. | | | | | | | | |

5510–22

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three Years Regular Course)

Second Year – Third Semester

CONSTITUTIONAL LAW – II

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The position of the President of India is similar to that of the Queen of England". Explain this statement.

   "இந்திய குடியரசுத் தலைவர் இங்கிலாந்து மகாராணியின் நிலைக்கு ஒப்பாவார்". இக்கூற்றினை விளக்குக.

2. Evaluate the Power of the Parliament to legislate with respect to matters contained in the state list.

   மாநில அட்டவணையில் உள்ள பொருண்மைகள் தொடர்பாக நாடாளுமன்றம் சட்டம் இயற்றும் அதிகாரத்தினை ஆராய்க.

3. Examine the grounds for the proclamation of failure of constitutional machinery in state and point out how far it transforms the Constitution of India into a unitary form of Government.

   மாநில அரசமைப்பு அங்கம் செயல்படாமை குறித்து நெருக்கடி நிலையை அறிவிப்பதற்கான காரணங்களை ஆராய்ந்து அது எவ்வாறு இந்திய அரசமைப்பை ஒற்றையாட்சியாக்குகிறது என்பதை விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the procedure for appointment of Chief Justice of India.

   இந்திய தலைமை நீதிபதியின் நியமனம் குறித்த நடைமுறையை விளக்கவும்.

5. Analyse the financial relations between the Union and State and evaluate the role of NITI AAYOG in this connection.

மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையேயான நிதி உறவுமுறையை ஆய்ந்து இது தொடர்பாக நிதி அயோக்-ன் பணியை மதிப்பிடவும்.

6. Comment upon the liability of the state for the torts committed by it servants in India.

இந்தியாவில் அரசு பணியாளர்களின் செய்கைகளுக்கு அரசின் தீங்கியல் பொறுப்பு நிலை பற்றி கருத்துரைக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Residuary Powers.

எஞ்சியுள்ள அதிகாரங்கள்

(b) Pardoning Power.

மன்னிப்பளிக்கும் அதிகாரம்

(c) Full faith and Credit, clause.

முழுநம்பிக்கை மற்றும் நாணய வகையம்

(d) Doctrine of Pleasure.

விருப்புரிமைக் கோட்பாடு

(e) Administrative Tribunals

நிர்வாகத் தீர்ப்பாயங்கள்

(f) Chawla v. State of Rajasthan.

சவ்லா எதிர் இராஜஸ்தான் மாநிலம்

(g) Samsher Singh v. State of Punjab

சம்சேர் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr. Puneethan was punished to undergo five days simple imprisonment, by an order of a legislature for breach of its privileges. He was not given an opportunity to explain the case. Mr. Puneethan approaches the High Court to quash the order. Is it sustainable? Decide.

திரு புனிதன் அவர்கள் ஒரு சட்டசபையின் உத்தரவால் அதன் சிறப்புரிமைகளை மீறியதற்காக ஐந்து நாட்கள் சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறார். தன் நிலையை விளக்க அவருக்கு எவ்வித வாய்ப்பும் அளிக்கப்படவில்லை. திரு புனிதன் இந்த உத்தரவு செல்லாது என அறிவிக்கும்படி உயர்நீதிமன்றத்தை அணுகுகிறார். இது நிலைக்கத்தக்கதா? தீர்மானிக்கவும்.

9. An amendment to the Constitution was made by the Parliament to validate with retrospective effect, the election of the Prime Minister which was set aside by the High Court. Is the amendment valid? Decide.

உயர்நீதிமன்றத்தால் செல்லத்தக்கது அல்ல என்று அறிவிக்கப்பட்ட ஒரு பிரதமரின் தேர்தலை முன்மேவு ஆளுகையுடன் செல்லுபடியாக்குவதற்காக அரசமைப்பு சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றம் கொண்டுவந்தது. இச்சட்டத்திருத்தம் செல்லத்தக்கதா? தீர்மானிக்கவும்.

10. State of Assam enacted a legislation imposing a tax on goods including tea carried by road or inland water-ways over any part of the state. The constitutionality of the Act was challenged on the ground that the law restricts the freedom of trade and commerce guaranteed under Article 301 of the Constitution. Is it sustainable? Decide.

மாநிலத்தின் எந்த பகுதியிலும் தரை வழியாகவோ அல்லது உள்நாட்டு நீர் வழியாகவோ தேயிலை உட்பட சரக்குகளை எடுத்துச் செல்வதற்கான வரிவிதிப்பு செய்து அஸ்ஸாம் மாநில அரசு ஒரு சட்டத்தை இயற்றியது. இச்சட்டம் இந்திய அரசமைப்பு உறுப்பு 301ன் கீழாக உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள வாணிபம் மற்றும் வியாபார சுதந்திரங்களை கட்டுப்படுத்துவதாக கூறி வழக்கிடப்படுகிறது. இது நிலைக்கத்தக்கதா? தீர்மானிக்கவும்.

---

GOVERNMENT LAW COLLEGE
15 N
LIBR

(2) TA3B

Register No. | | | | | | | | |

5416–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

LAND LAWS

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. State how keeping certain legislations under the IX Schedule of the Constitution is beneficial to the weaker sections of the community?

சில சட்டங்களை அரசமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் கீழ் வைத்துள்ளது, எவ்வாறு சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு நலம் பயப்பதாக உள்ளது?

2. What are the reasonable grounds of eviction of a cultivating tenant under the 1955 Act? What is the procedure for eviction?

ஒரு பயிரிடும் குத்தகைதாரரை வெளியேற்றுவதற்கான சட்டபூர்வ காரணங்கள் யாவை என 1955-ஆம் ஆண்டுச்சட்டம் கூறுகிறது? அவரை வெளியேற்றுவதற்கான நடைமுறை என்ன?

3. Bring out all the grounds of eviction of a tenant under the Buildings (Lease and Rent Control) Act 1960.

ஒரு வாடகைதாரரை வெளியேற்றுவதற்காக 1960-ஆம் ஆண்டின் கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாட்டுச்) சட்டத்தில் கூறப்பட்டுள்ள காரணங்கள் யாவை?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டினுக்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the rights and liabilities of the parties under the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act 1956.

1956-ஆம் ஆண்டின், தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாடகை செலுத்துச்) சட்டத்தில் கூறப்படும் தரப்பினரின் உரிமைகளும் கடமைகளும் யாவை – விளக்கவும்.

5. What are the matters that completely differentiates the Land Acquisition Act 1894 from the Land Acquisition Act 2013?

2013-ம் ஆண்டின் நிலக்கையகப்படுத்துதல் சட்டத்திலிருந்து 1894-ம் ஆண்டின் நிலக்கையகப்படுத்துதல் சட்டத்தை வேறுபடுத்தும் விவரங்களை யாவை?

6. Write down the salient features of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act 1969.

1969-ஆம் ஆண்டின் தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுருச் சட்டத்தின் சிறப்பியல்புகளை எழுதுக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Tanjavore Tenants and Pannayals Protection Act 1952

தஞ்சாவூர் குத்தகைதாரர்கள் மற்றும் பண்ணையாட்கள் பாதுகாப்புச் சட்டம் 1952.

(b) Rights of a Zamindar

ஜமீன்தாரரின் உரிமைகள்

(c) Inam Commission

இனாம் ஆணையம்

(d) Kudiyiruppu and its transfer

குடியிருப்பு மற்றும் அதன் உரிமைமாற்றம்

(e) Land Board

நில வாரியம்

(f) Wilful Default

வேண்டுமென்றே தவறு செய்தல்

(g) Public purpose.

பொது நோக்கம்.

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. While preparing the record of tenancy rights for Agricultural lands, a cultivating tenant gave an incorrect information. He also omitted some information. What can he do?

வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு தயாரிக்கப்படும் போது ஒரு பயிரிடும் குத்தகைதாரர் சில தகவல்களை சரியற்ற தகவல்களாகத் தருகிறார். மேலும் சில தகவல்களைத் தரத் தவறிவிட்டார். அவர் என்ன செய்யலாம்?

9. A family consists of husband, wife and two minor sons. Husband has 15 standard acres and the wife has 15 standards acres of land as Sridhana land. Minor sons have no property. How much acres can be retained and how much acres will be declared excess under the Ceiling Act?

கணவன், மனைவி, இரண்டு இளவர் மகன்களைக் கொண்ட குடும்பத்தில் கணவர் 15 தரநிலை ஏக்கர்கள் நிலத்தைப் பெற்றுள்ளார். மனைவி சீதன நிலமாக 15 தரநிலை ஏக்கர்களை பெற்றுள்ளார். இளவர் மகன்களுக்கு சொத்து ஏதும் இல்லை. நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அக்குடும்பம் எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம்? எவ்வளவு நிலம் மிகை நிலமாகும்?

10. 'A', a landlord, often interferes with the lift service which is also used by the tenant 'B'. What is the remedy available to the tenant 'B' against 'A'?

'அ' என்னும் ஒரு கட்டிட உரிமையாளர், 'ஆ' என்னும் வாடகைதாரரும் தானும் உபயோகிக்கும் மின்தூக்கியின் செயல்பாட்டில் அடிக்கடி இடையூறு செய்கிறார். 'ஆ' என்னும் வாடகைதாரருக்கான தீர்வழி யாது?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 2023

Register No. | | | | | | | | |

**TA3C** **5417–22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three – year Regular Course)

Second Year – Third Semester

INTERPRETATION OF STATUTES

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The words shall be given the natural, plain and grammatical meaning" – Comment.

   "சொற்களுக்கு இயல்பான மற்றும் இலக்கண மரபு குன்றாமல் பொருள் கொளல் வேண்டும்" - விமர்சிக்க.

2. Critically examine with reasons the statement that penal statutes must be construed strictly.

   தண்டனைச் சட்டங்கள் கண்டிப்பான பொருள் விளக்கத்திற்கு உள்ளடங்கி பொருள் விளக்கம் செய்யப்பட வேண்டும் என்பதைக் காரணங்களோடு திறனாய்வு செய்க.

3. Examine the different approaches adopted by the judiciary while interpreting Part - III of the Constitution.

   அரசமைப்புச் சட்டம் பகுதி - IIIஐ பொருள் விளக்கம் செய்யும் போது நீதிமன்றங்களின் பல்வேறு அணுகுமுறைகள் பற்றி ஆய்வு செய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss about the provisions relating to Orders and Rules under the General Clauses Act, 1897?

   பொது வகையச் சட்டம் 1897ன் கீழ் கட்டளைகள் மற்றும் விதிகள் தொடர்பான வகைமுறைகள் பற்றி விவாதிக்கவும்.

5. "External Aids are subsidiary aids in the interpretation of statutes" – Explain.

"சட்டப்பொருள் விளக்கம் காண்பதில் வெளிப்புற காரணிகள் துணை காரணிகளாகும்" – விளக்குக.

6. Explain with reference to decided cases "The Golden Rule" of Interpretation.

சட்டப்பொருள் விளக்கத்தின் 'பொன் விதியை' தீர்மானிக்கப்பட்ட வழக்குகள் துணை கொண்டு விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following.

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) De minimis non curat lex

சட்டத்திற்கில்லை அற்பத்தில் அக்கறை

(b) Mandatory statutes

வலியுறுத்தும் சட்டம்

(c) Proviso

வரம்புரை

(d) Legal fiction

சட்டப் புனைவு

(e) Sententia legis

சட்டமன்ற நோக்கம்

(f) Generalia specialibus non-derogant

தனி விதிக்கிசைந்தே பொது விதி இயங்கும்

(g) Expressio unius est exclusio alterius

வெளிப்படைக்குறிப்பு விலக்கும் மற்றவைகளை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Sridaran was prosecuted for an offence under a penal statute. After the charge was framed but before the conclusion of the trial, the statute was amended and the punishment for the offence was reduced from life imprisonment to imprisonment for a period of seven years. On conviction Sridaran claims the benefits of the amendment. Decide.

தண்டனை சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்காக ஸ்ரீதரன் மீது வழக்கு தொடரப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட பிறகு, ஆனால் விசாரணை முடிவதற்குள் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு குற்றத்திற்கான தண்டனையை ஆயுள் தண்டனையில் இருந்து ஏழு ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. ஸ்ரீதரன் தண்டனையின் பேரில் சட்டத்திருத்தத்தின் பலனை கோருகிறார். முடிவு காண்க.

9. Bihar Finance Act, 1981 imposed purchase tax on sugarcane used in sugar manufacture by Mr. Arul, And also, Bihar Sugarcane (Regulation of Supply and Purchase) Act, 1981 imposed purchase tax on sugarcane. Arul challenged such practice on the ground of double taxation. Advise Arul.

அருள் என்பவருக்கு சர்க்கரை உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கரும்பிற்கு பீகார் நிதிச்சட்டம், 1981 கொள்முதல் வரி விதித்தது. மேலும் பீகார் கரும்பு விநியோகம் மற்றும் கொள்முதல் ஒழுங்குமுறை சட்டம், 1981 மூலம் கரும்பிற்கு கொள்முதல் வரி விதித்தது. அருள் அதனை இரட்டை வரி விதிப்பு என்று வாதிடுகிறார். அருளிற்கு ஆலோசனை வழங்கவும்.

10. Under the Minimum Wages Act, State Government is empowered to fix minimum wages in an industry. However the Act does not define what is minimum wage and makes no provision for taking into consideration the capacity of an employer to pay the minimum wage fixed by the state government. A petition was moved before the court seeking to strike down the Act as violative of Article 19(1)(g) of the Constitution which guarantees the right to practise any profession or to carry on any occupation, trade or business to all citizens. Decide on the basis of principles of interpretation of statutes.

குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் கீழ் ஒரு தொழிலில் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது. எவ்வாறாயினும், சட்டம் குறைந்த பட்ச ஊதியம் என்ன என்பதை வரையறை செய்யவில்லை மற்றும் மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தை வழங்குவதற்கான முதலாளியின் திறன் கருத்தில் கொள்ள எந்த ஏற்பாடும் செய்யவில்லை. அனைத்து குடிமக்களுக்கும் எந்த ஒரு தொழில் வேண்டுமானாலும் மேற்கொள்ள அல்லது தொழில், வர்த்தகம் அல்லது வியாபாரத்தை மேற்கொள்வதற்கு உரிமையை உறுதிப்படுத்தும் அரசமைப்பின் உறுபு 19 (1) (g) விதியை மீறும் சட்டத்தை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. சட்டங்களின் விளக்க கொள்கைகளின் அடிப்படையில் முடிவு காண்க.

---

GOVT. LAW COLLEGE, TRI... LIBRARY

Register No. | | | | | | | | |

**TA3D** **5418–22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

COMPANY LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Members may come and go but the company can go on forever" – Explain the salient features of a company as an artificial legal personality.

   "உறுப்பினர்கள் வருவர், செல்வர், ஆனால் நிறுவனம் என்றும் நிலைத்திருக்கும்" – செயற்கை சட்ட நபரான நிறுவனத்தின் சிறப்பியல்புகளை விளக்கவும்.

2. Explain the rule of majority supremacy in Foss v. Harbottle with its exceptions for protecting minority rights.

   பாஸ் எதிர் ஹார்பாட்டல் வழக்கிலுள்ள பெரும்பான்மை மேலாண்மை விதியை சிறுபான்மை பங்குதாரர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதிவிலக்குகளுடன் விவரிக்கவும்.

3. Describe the establishment and proceedings of the Securities and Exchange Board of India (SEBI).

   இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் அமைப்பு மற்றும் நடவடிக்கைகளை விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Share certificate is prima facie evidence of title and payment on shares by person" – Explain.

   பங்கு சான்றிதழ் என்பது ஒரு நபரின் பங்குகளின் உரிமைமூலம் மற்றும் தொகை செலுத்தியது குறித்த முதல் நோக்கு சாட்சியாகும் – விளக்குக.

5. Explain the powers and duties of company liquidator in winding up of the company.

நிறுவன கலைப்பின் போது நிறுவன கலைப்பு அதிகாரியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விளக்கவும்.

6. Enumerate the different classes of companies under the Companies Act, 2013.

நிறுவனச் சட்டம், 2013–இன் கீழ் உள்ள பல்வேறு வகையான நிறுவனங்களை எண்ணிக்கையிட்டு விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Minutes
குறிப்பேடு

(b) Key managerial personnel
மேலாளர் சார் பணியாளர்கள்

(c) Dividend
பங்காதாயம்

(d) Ashbury Railway Company v. Riche.
ஆஷ்பெரி இரயில்வே நிறுவனம் எதிர் ரிச்சி

(e) Doctrine of constructive notice.
கொள்நிலை அறிக்கை கோட்பாடு

(f) Statement in lieu of prospectus.
திட்ட அறிவிப்புக்கு ஈடான அறிக்கை

(g) Call on shares.
பங்கு தொகை கோரிக்கை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'W' and 'R' as shareholders and directors formed a textile manufacturing private limited company with equal voting rights. On dissenting opinion, they become hostile and communicated through the secretary. Give a legal solution and analyse whether winding up can be ordered although the business was flourishing.

'அ' மற்றும் 'ஆ' பங்குதாரர்களாக மற்றும் இயக்குநர்களாக சம வாக்குரிமையுடன் ஜவுளி (துணி) உற்பத்தி தனியார் நிறுவனம் ஒன்றை அமைத்தனர். மாறுபட்ட கருத்து வேற்றுமையால் ஏற்பட்ட பகைமை உணர்வால், நிறுவன செயலாளர் மூலம் தொடர்பு கொண்டனர். சட்ட தீர்வளித்து, நிறுவனம் நல்ல நிலையில் உள்ளபோதும் நிறுவன கலைப்பு ஆணையிடலாமா என்று ஆராய்க.

9. Shares were allotted to a minor 'A' on an application signed on her behalf by her guardian. The company went into liquidation. In the winding up of the company, who will be held liable as contributory? Minor or Guardian? Analyse.

'அ' என்ற இளவருக்குச் ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகளுக்குரிய விண்ணப்பத்தில் அவரின் சார்பாக அவர் காப்பாளர் கையொப்பமிட்டார். நிறுவனம் கலைக்கப்பட்டது. நிறுவன கலைப்பின்போது பங்களிப்பாராக யார் கருதப்படுவார்? இளவரா? காப்பாளரா? ஆராய்க.

10. A group of company promoters for a new hotel business entered into a contract with 'A' on behalf of company which was not yet registered for purchase of food products. On registration, the company ratified the contract. But the food products were consumed before the payment of amount and the company went into liquidation. Is company liable for the payment? Analyse.

ஒரு புதிய ஹோட்டல் வியாபாரத்தின் நிறுவன துவக்குனர்கள், நிறுவனம் பதிவு செய்யப்படாத நிலையில் உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக 'அ' என்பவரிடம் ஒப்பந்தமிட்டனர். நிறுவனம் பதிவு செய்த பின் ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டது. ஆனால் தொகை செலுத்தப்படுவதற்கு முன்பாக உணவு பொருட்கள் பயன்படுத்தப்பட்டது மற்றும் நிறுவனம் கலைக்கப்பட்டது. செலுத்த வேண்டிய தொகைக்கு நிறுவனம் பொறுப்பாகுமா? ஆராய்க.

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
15 MAY 20..

Register No.

TA3E

5419–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, DECEMBER 2022.

(Three – year – Regular Course)

Second Year – Third Semester

BANKING LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is a banking instrument? Explain the different kinds of banking instruments under the Negotiable Instruments Act.

   வங்கி முறை ஆவணம் என்றால் என்ன? மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் வங்கி முறையாவணங்களின் பல்வேறு வகைகளை விளக்கவும்.

2. Discuss the business permitted and prohibited for a banking company under the Banking Regulation Act, 1949.

   வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949-ன் படி வங்கிகள் மேற்கொள்ள வேண்டிய மற்றும் மேற்கொள்ளக் கூடாத வர்த்தகங்களைப் பற்றி விவாதிக்க.

3. Explain the provisions relating to dishonour of cheque under the Negotiable Instruments Act.

   மாற்றுமுறையாவணங்கள் சட்டத்தின் கீழ் ஒரு காசோலைக்கு மதிப்பு மறுக்கும் பிரிவுகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the legal aspects of entries in a Pass-book.

   வங்கிச் செல்லேட்டில் உள்ள பதிவுகள் பற்றிய சட்ட நிலைமையை விவரி.

5. Examine the role played by the Reserve Bank of India as the Central Bank of our country.

நம் நாட்டின் மைய வங்கியாக இந்திய ரிசர்வ் வங்கி ஆற்றும் பங்கினை ஆராய்க.

6. Discuss the legal position of a banker regarding a Fixed Deposit Receipt.

நிலை வைப்பீட்டு இரசீது ஒன்றினைக் குறித்து வங்கியரின் சட்ட நிலைப்பாட்டை விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Savings Bank Accounts

சேமிப்பு வங்கிக் கணக்குகள்

(b) Wrongful dishonour of cheque by banker

வங்கியரின் தவறுதலான காசோலை மறுப்பு

(c) Rule in Devaynes v. Noble

டேவேனஸ் எதிர் நோபள் விதி

(d) Collecting Banker as Agent

முகவராக வசூலிக்கும் வங்கியர்

(e) Financial Institutions Act 1993

நிதி நிறுவனங்கள் சட்டம் 1993

(f) E-banking

மின்னணு வங்கியல்

(g) Debt Recovery Tribunal

கடன் வசூலிக்கும் தீர்ப்பாயம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A cheque comes to a paying banker for payment having the amount differing in words and figures. In such a circumstance what measures should the paying banker do?

ஒரு காசோலையானது அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை வார்த்தையிலும் எண்களிலும் வேறுபாட்டுடன் பணம் செலுத்தப் பெறுவதற்காக பணம் செலுத்தும் வங்கியருக்கு வருகிறது. பணம் செலுத்தும் வங்கியர் என்ன செய்ய வேண்டும்?

9. 'A' sells goods to 'B'. 'B' pays to 'A' through a cheque before 'B' could obtain delivery of goods. But B's cheque has been dishonoured by the bank. 'A' refuses to give delivery of goods until paid. Is A's action justified?

'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு சரக்குகளை விற்கின்றார். 'ஆ' என்பவர் ஓர் காசோலை மூலம் 'அ'விற்கு சரக்குகளை பெறும் முன் பணம் தருகிறார். ஆனால் வங்கியர் அவர் கொடுத்துள்ள காசோலையினை நிராகரித்து விடுகின்றார். இச்சூழ்நிலையில் 'அ' என்பவர் சரக்குகளை தர மறுக்கிறார். 'அ'வின் இச்செயல் நியாயமானதா?

10. A cheque is drawn payable to "Murali or order". It is stolen and Murali's endorsement is forged. The Banker pays the cheque in due course. Is the banker discharged from liability?

முரளி என்பவரோ அல்லது ஆணை பெற்றவரோ பெறும்படியாக ஓர் காசோலை வரையப்பட்டிருந்தது. அந்த காசோலை களவாடப்பட்டு முரளி என்பவருடைய மேற்குறிப்பும் பொய்யாக புனையப்பட்டிருந்தது. வங்கி முறைப்படி அக்காசோலைக்குரிய பணத்தை செலுத்தி விட்டது. வங்கி பொறுப்பு நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டதா?

---